10

கூண்டல்

நேற்று மெரீனா பீச்சில் பெருங்களத்தூர் சம்புவைப் பார்த்தேன். நாங்கள் ஏதோ தினமும் சந்தித்து அளவளாவுவதுபோல நெருங்கிய பரிச்சயம் தோன்றும் புன்னகை புரிந்தான். அவன் கையில் இருந்த பொட்டலத்தை என் பக்கம் நீட்டி, “கொஞ்சம் எடுத்துக்கறியா?” என்று கேட்டான்.

“இந்த வயசில உனக்குப் பல் இருக்கலாம். எனக்கு இல்லை” என்றேன்.

அவன் பொட்டலத்தை மீண்டும் நீட்டினான். முறுக்கையோ சீடையையோ தூள் செய்து நிரப்பியிருந்தது. அவன் மனைவி அவனுடன் இருக்கிறாள் என்று தெரிந்தது.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனிக்கு வெகு நாட்கள் முன்னரே பெருங்களத்தூரைப் பிரபலமாக்கியவன் சம்பு. நான் வேலைக்கிருந்த பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்து கொண்டு, மாதமொரு முறை அமெச்சூர் நாடகங்களில் மேடையில் தோன்றுவான். அவன் நடித்து வந்த ஒரு நாடகத்தைச் சினிமாவாக எடுக்க ஒருவர் முன் வந்தார். இருபது பேர் இருபது நாட்கள் கல்கத்தாவில் தடுமாறினார்கள். சென்னை திரும்பியபோது நாடகத்தைச் சினிமாவாக உருமாற்றிக் கொண்டு வந்தார்கள். சம்புவுக்குத் தாடிக்கார இராப்பிச்சைக்காரன் வேஷம். அந்தப் படத்திற்குப் பிறகு எந்தத் தமிழ்ப் படத்திலும் தாடியோடு பாடவும் வேண்டுமென்றால் சம்புவைத்தான் அமர்த்தினார்கள். சம்பு ஆசிரியர் வேலையை விட்டு விட்டு நுங்கம்பாக்கத்தில் மூவாயிரம் ரூபாய்க்கு ஒரு வீட்டை வாங்கிக்கொண்டு (இது 1938—ல்) முழு நேர சினிமாக்காரன் ஆனான். ஆசிரியர் வேலையை விட்டாலும் பாடத்தை விடவில்லை என்பது ஷேக்ஸ்பியர் நாடகமாகிய ‘கிங்லிய’ரைத் தமிழில் அவன் சினிமாவாக எடுக்க முடிவு செய்ததில் தெரிந்தது.

ஒரு நாள் காலை ரிக்ஷாவில் என் வீட்டு முன்னால் வந்து இறங்கினான். நான் அவனைப் பாராதது போல இருந்தேன்.

"என்னப்பா, வீடு தேடி வந்தா இப்படி அலட்சியம் பண்ணறியே?" என்று கேட்டான்.

"அலட்சியமா...? உன்னையா? நீ சினிமாக்காரன். தாடியை உருவிண்டு வந்தா ஊரே உன் பின்னாலே வரும்."

"அது சரி, எனக்கு நீ ஒரு ஒத்தாசை பண்ணனும்."

"என்ன...?"

"என்கிட்டே ஒரு இருபத்தைஞ்சு இருக்கு. மேலே ஒரு பத்தோ பதினைஞ்சோ இருந்தா வெளியிலேருந்து இன்னும் ஒரு இருபது முப்பது புரட்டி 'கிங் லிய'ரை முடிச்சுடலாம்..." (இது 1938—ல்)

"பத்து கித்தெல்லாம் முடியாது. எங்கிட்டே ஆறு ஏழுக்கு மேலே தேறாது..."

"அது போறும். நீ ஆபீஸைப் பார்த்துக்கோ; கணக்கு வழக்கு எல்லாம் உன் பொறுப்பு. படம் முடிஞ்சா அஞ்சுலே ஒரு பங்கு உனக்கு..."

"அதெப்படி? மூணிலே ஒரு பங்குன்னா நான் சேர்ந்துக்கறேன்."

"சரி, அப்படியே மூணிலே ஒரு பங்கு. புனாலேதான் ஷூட்டிங்குக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். ஏப்ரல், மே மாசத்திலே போனா மழைக்கு முன்னாலே படத்தை எடுத்து முடிச்சுட்டு வரலாம்."

நானும் சினிமாக்காரன் ஆனேன். பணத்தைப் போட்டதோடு மட்டுமல்லாமல் நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு, 'கிங் லியர்' நாடகத்தைச் சினிமாவுக்கு ஏற்றபடி தமிழில் மாற்றித் தந்தேன். புனா மட்டும் நான் போகவில்லை. ஆனால் சம்புவுக்காக அந்த ஆறு மாதத்தில் இருபது வருஷ உழைப்பு உழைத்தேன்.

புனா போய்த் திரும்பி வந்ததிலிருந்து சம்பு பழையபடி இல்லை. இப்போது அவனிடம் பணம் நிறையப் புரண்டது. அவன் நடத்தையால் அன்றாட வேலைகள் சரிவர நடப்பதே பெரும் பாடாகி விட்டது. எல்லார் முன்னிலையிலும் இல்லாமல் தனியாக அவனிடம் பேசிவிட வேண்டும் என்று ஒருநாள் இரவு எட்டு மணிக்கு அவனுடைய நுங்கம்பாக்கம் வீட்டிற்குச் சென்றேன்.

ஒரு சிறு பீரோ அளவு இருந்த ரேடியோகிராம் பங்கஜ் மல்லிக் பாடல்களை ஒலிக்கச் செய்து கொண்டிருந்தது. அதைக் கேட்டபடியே சம்பு 'தீர்த்தம்' அருந்திக் கொண்டிருந்தான். என்னைப்பார்த்து, "வா,வா" என்று மிகையாகவே வரவேற்றான்.

"புனாவுக்குப் போனியே, வேலையெல்லாம் சரியாக முடிஞ்சுதா?"

"பிரமாதம். இன்னும் ஒரு வாரத்திலே ஆர்.ஆர். பிரிண் டோட டைரக்டர் வந்து விடுவார், போட்டுப் பார்க்கலாம்."

"ஆபிஸிலிருந்த அக்கவுண்ட்டண்டை வீட்டுக்கு அனுப்பிச் சுட்டே. பியூனை சரளாபாய் வீட்டு வேலை செய்ய அனுப்பிச் சுட்டே. ஜாயிண்ட் அக்கவுண்ட்டிலிருந்த பணத்தை எல்லாம் திருப்பி வாங்கிண்டு பத்து ரூபாய் பாக்கி வைச்சிருக்கே. நான் இந்த மாசம் வாடகை, மத்த சம்பளப் பட்டுவாடாவெல்லாம் எப்படிச் செய்யறது? நீயோ ஆபீஸுக்கே வரதில்லை...."

"இதோ பார் நீலகண்டன்! நான் எல்லாத்துக்கும் வேற ஏற்பாடு பண்ணிண்டிருக்கேன், இனிமே தனியா ஆபீஸ் வேண்டாம்."

"இதை ஒழுங்கா என்கிட்டே முதல்லியே சொல்லலாம் இல்லியா? ஏண்டா? நான் பார்ட்னர்னு இருந்துண்டு..."

"ஒரு நிமிஷம் நீலகண்டன்... நீ எவ்வளவு பணம் போட்டிருக்கே...?"

"ஏன், உனக்குத் தெரியாதா?"

"ஆறாயிரம் இருக்குமா?"

"நிஜமாவாடா கேக்கறே?"

"நாளைக் கார்த்தாலே ஆறாயிரம் ரூபாய்க்குச் செக் கொடுத்துடறேன். உன் இஷ்டம் போலச் செய்யலாம்..."

"உன் கையிலே பணம் இருந்தாக் கொடு. ஆனா அப்புறம் என்னமோ சொன்னயே, என்னது...?"

"உனக்கும் எனக்கும் இனிமே சம்பந்தம் இல்லை. உன் பணத்தை முழுக்கத் திருப்பிக் கொடுத்துடறேன்."

"பணத்தை முழுக்கத் திருப்பிக் கொடுத்துடறியா? அப்புறம் பாக்கி?"

"என்ன பாக்கி?"

"இந்தப் படத்திலே எனக்கு மூணுலே ஒரு பங்கு இருக்கு, ஞாபகமிருக்கோல்லியோ...?"

"நீ போட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்தப்புறம் பாக்கி என்ன, பங்கு என்ன?"

"ஏண்டா, நிதானத்தோடதான் பேசறியா?"

"இதோ பார், நீலகண்டன். கொஞ்சம் மரியாதையாவே பேசு...!"

"என்னடா மரியாதை குறைஞ்சுது?"

"கெட் அவுட்? முதல்லே கெட் அவுட்!"

"டேய்..."

"கெட் அவுட்! உனக்கு நான் ஒண்ணும் எழுதித் தரலை. ஏதோ சமயத்துக்குக் கொஞ்சம் கைமாத்து வாங்கிண்டா ரொம்பத் தான் தலை மேலே ஏறறே... கெட் அவுட்! கெட் அவுட்!"

நான் வெளியில் வந்து விட்டேன். சம்பு திட்டம் போட்டுச் செய்ய மாட்டான். ஆனால் வாய்ப்பு வந்தால் குழி தோண்டிப் புதைத்து விடுவான் என்று தெரிந்தது.

நான் ஒரு வாரம் காத்திருந்தேன். பிறகு நாதனைப் பார்க்கப் போனேன். அந்த இரண்டு மூன்று வருடங்களில் சென்னையில் நாதன்தான் மிகப் பெரிய திரைப்பட விநியோகஸ்தராக வளர்ந் திருந்தார். சம்புவும் அவனுடைய படத்தை அவரிடம்தான் விற்று விடப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தான். நாதனும் ஒருமுறை என்னிடம் ஐந்நூறு ரூபாய் வாங்கி இரு மாதங்கள் கழித்து ஆயிரமாகத் திருப்பித் தந்திருக்கிறார். "என்னய்யா. நீயும் சினிமாக்காரனாயிட்டியாமே?" என்று விசாரித்தார்.

"அதிலேதான் வந்தது வினை," என்றேன். விஷயத்தைச் சொன்னேன். "நீ ஒண்ணும் கவலைப்படாதே. நான் அவனை உன் வீடு தேடி வரச் செய்யறேன்" என்றார்.

நிஜமாகவே சம்பு என் வீட்டிற்கு வந்து விட்டான். அவன் வந்த வேளையில் நான் வீட்டிலில்லாததால் அரை மணி நேரம்போல அவன் காத்திருக்க வேண்டியிருந்தது.

"உனக்கு நாதனை ரொம்ப நன்னாத் தெரியுமாமே?" என்று கேட்டான்.

"உனக்கு வெக்கம் மானம் கிடையாதா?" என்று கேட்டேன்.

"ஏம்ப்பா... அவர் நம்ப படத்தைப் பத்தி உன்னைக் கேட்டா ராம், நீ ஒண்ணுமே பதில் சொல்லலையாமே?"

நான் வேறு பக்கம் பார்த்துத் திரும்பி உட்கார்ந்து கொண்டேன்.

"அவர் படத்தை ஒரேயடியா வாங்கிண்டா கிளீனா அவரை லகரம் கிடைக்கும். அவர் உன்னைக் கேட்டிருக்கார், நீ வாயே திறக்கலையாம்..."

"நான் என்ன வாயைத் திறக்கறது?"

"என்னப்பா இப்படிச் சொல்லறே? நீ ஒரு பார்ட்னரா யிருந்துண்டு இப்படி அக்கறையில்லாம நடத்துக்கலாமா?

"என்ன சொன்னே? என்ன சொன்னே?"

"அது சரிதாம்ப்பா. உனக்குக் கால் பங்கு இருக்கு இல்லே?"

"மூணிலே ஒரு பங்கு..."

"சரி, மூணிலே ஒரு பங்கு. முதல்லே நாதனைப் பார்த்துப் படத்தை வாங்கறதுக்கு வழி பண்ணு. நீ ஒரு வார்த்தை சொல்லாம அவர் வாங்கவே மாட்டாராம்."

என் முதலுக்கு மேல் ரொக்கமாகப் பத்தாயிரம் கிடைத்தது. பத்தாயிரத்துக்கு 1938ல் மவுண்ட்ரோடில் மனை வாங்கலாம். நான் மன்னார்குடியில் வாங்கினேன்.

சம்பு செவர்லே கார் வாங்கினான். 'கில் லியர்' திரைப்பட உலகில் மிகக் குறைந்த இடங்களில் — மிகக்குறைந்த காட்சிகள் காட்டப்பட்ட படங்களில் ஒரு சிறப்பிடம் சம்பாதித்துக் கொண் டது. அதன் பிறகு இந்த நாற்பது வருஷங்களில் நான் எப்படி எப்படியோ கெட்டுக் குட்டிச் சுவராகித் திருவல்லிக்கேணி சைடோஜி சந்தில் ஒரு வீட்டில் மாடிப் படிக்கடியில் 'ரூம்' வைத்துக் கொண்டிருக்கிறேன். சம்புவும் கெட்டுக் குட்டிச் சுவராகி, அக்பர் சாஹேப் தெருவில் ஒரு வெற்றிலை பாக்குக் கடையில் குடித்தனம் இருக்கிறான். எப்படி அவன் மனைவியும் அவனுடன் இருக்கிறாள் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

நாங்கள் இருவரும் பேசாமல் நடந்தோம். மணலில் ஒரு படகுக்கு அருகில் தனியாக ஓர் உருவம் உட்கார்ந்திருந்தது. நாங்கள் தாண்டிப் போனபோது, "என்னப்பா பாக்காது மாதிரிப் போறீங்க?" என்று கேட்டது. யாருமில்லை; நாதன்தான்.

“நீங்களா? இங்கே எங்கே?” என்று கேட்டேன்.

“இங்கேதான் இருக்கேன். ரங்கநாதன் தெருவிலே ராஜா மணின்னு ஒருத்தர் இல்லே — அதான் பட்சணம் போடறவர் — அவர் வீட்டிலேதான் நாலு மாசமா இருக்கேன்.”

“என்ன பண்ணறீங்க, சார்...?”

“என்ன பண்ணறது? சும்மாத்தான் இருக்கேன். ராஜா மணிக்குக் கூடமாட ஒத்தாசை பண்ணறேன். இந்த மாசம் நிறை யக் கல்யாணம்.”

எனக்கு வருத்தமாக இருந்தது.

“சுண்டல் கொஞ்சம் கொண்டு வந்திருக்கேன், திங்க றீங்களா? இரண்டு பேரும் கையை நீட்டுங்க, ஆளுக்குக் கொஞ்சம் போடறேன்.”

அந்தச் சுண்டல் தின்ற பிறகு அன்றிரவு எனக்குச் சோறு இறங்கவில்லை.

1982